# கோலாலம்பூர் மேம்பாட்டு திட்டம் 2040: தாமான் டானாவ் டேசா குடியிருப்பாளர்கள் டி.பி.கே.எல்.க்கு எதிராக வழக்கு

கோலாலம்பூர், ஜூன் 17- அண்மையில் 2040 ஆம் ஆண்டு கோலாலம்பூர் மேம்பாட்டு திட்டம் அரசிதழில் பதிவு செய்யப்பட்டது தொடர்பில் நீதித்துறை சீராய்வு கோரி தாமான் டானாவ் டேசா குடியிருப்பாளர்கள் வழக்கு தொடுக்கவுள்ளனர்.

ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்பு மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிலத்தில் அமைந்துள்ள தங்களுடைய விளையாட்டு மைதானத்தையும் போலீஸ் நிலையத்தையும் காப்பாற்றும் ஒரு முயற்சியாக அவர் இந்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். தங்களுடைய ஆட்சேபங்களும் விண்ணப்பங்களும் கவனிக்கப்படாமல் அலட்சியம் செய்யப்பட்டதால் கோலாலம்பூர்மாநகர மன்றத்தை (டி.பி.கே.எல்) நீதிமன்றத்திற்கு இழுப்பது என தாங்கள் தீர்மானித்ததாக தாமான் டேசா குடியிருப்பாளர்கள் இயக்கத்தைச் சேர்ந்த லோக் ஷி ஷுவென் கூறினார்.

தாமான் டேசா சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள தாமான் டானாவ் டேசாவைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் அந்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மிதமிஞ்சிய மேம்பாடு குறித்து இவ்வாண்டு தொடக்கத்தில் கவலை தெரிவித்திருந்தனர்.

கடந்தாண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட மேம்பாட்டு திட்ட வரைவின் படி வானுயர குடியிருப்பு மேம்பாடுகளுக்காக தாமான் டானாவ் டேசா சமூக விளையாட்டு மையம் மறுசீரமைப்பு செய்யப்பட்டது. டானாவ் டேசா விளையாட்டு மைதான நிலத்திற்கு நேராக ஆடம்பர அடுக்குமாடி குடியுருப்பு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.




போலீஸ் நிலையம் அமைந்துள்ள நிலம் வானுயர குடியிருப்புகளின் மேம்பாட்டிற் காக ஒதுக்கப்பட்டிருப்பதை மேம்பாட்டு திட்டம் அரசிதழில் பதிவு செய்யப்பட ஒரு மாத காலம் இருக்கும் போது குடியிருப்பாளர்கள் கண்டு பிடித்தனர்.

விளையாட்டு மைதானம் மறுசீரமைக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு பின்னரே அதனை தாங்கள் இழுந்து விட்ட விவகாரம் குடியிருப்பாளர்களுக்கு தெரிய வந்தது என்று லோக் கூறினார்.

கடந்த 2019 ஆம் தேதி விளையாட்டு மைதானத்தை சுற்றி வேலி அமைக்கப்பட்ட போது தான் இதனை நாங்கள் உணர்ந்தோம் என்று அவர் தெரிவித்தார்.

நாங்கள் எந்த முயற்சியும் எடுக்காமல் வெறுமனே இருந்து விட முடியாது. எங்களுடைய பசுமை நிறைந்த பகுதிகளுக்கு நாங்கள் போராடதான் வேண்டும்.

பொதுமக்களின் கைதிகளுக்கானது அந்த நிலம் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2023ஆம் ஆண்டு கூட்டரசு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு தங்களுடைய போராட்டத்திற்கு உதவும் என்று லோக் நம்பிக்கை தெரிவித்தார்.